பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 90

திங்கட்கிழமை
24 பெப்ரவரி 2025

மாசி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## வெப்பநிலை உயரலாம்!

யாழ்ப்பாணம், பெப்.24
வடக்கு மாகாணம் உட்பட சில மாகாணங்களில் வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்துக்கு உயரலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறி 14

எதிர்வரும் ஏப்ரல் மாதம்

# இலங்கை வருகின்றார் இந்தியப் பிரதமர் மோடி

உயர்மட்டச் சந்திப்புகளுக்கு ஏற்பாடு
கூட்டுத்திட்டங்களுக்கு செயல்வடிவம்

**கொழும்பு, பெப்ரவரி 24**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஏப்ரல் மாதம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவுள்ளார். இந்தியப் பிரதமரின் இந்தப் பயணத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் உள்ளிட்டவர்களும் பங்கேற்கவுள்ளனர். 14



## 32 மீனவர்களின் கைதுக்கு இராமேஸ்வரத்தில் எதிர்ப்பு!

சென்னை, பெப்.24
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 32 பேர் நேற்று அதிகாலை இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் இன்று வேலைநிறுத்தப் போராட்டத் 14

## சம்பூர் சூரியமின்நிலையத்துக்கு இந்தியப்பிரதமர் மோடி அடிக்கல்!

கொழும்பு, பெப்.24
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஏப்ரல் மாதம் இலங்கைக்கு வரவுள்ள நிலையில், சம்பூர் சூரியமின் உற்பத்தி நிலையத்துக்கான கட்டுமான ஆரம்பவிழாவிலும் கலந்துகொள்ளவுள்ளார். 14

## எம்.பி.க்களுக்கான பாதுகாப்பு; தீர்மானத்தில் மாற்றமில்லை!

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.24
நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக பொலிஸ் உத்தியோகத்தர்களை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் எந்தத் தீர்மானமும் எடுக்க 14

## ஐ.நா. அமர்வில் கலந்துகொள்ள விஜித தலைமையில் உயர்குழு

கொழும்பு, பெப்.24
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், வெளிவிவகார அமைச்சர் விஜித 15

வேகக்கட்டுப்பாட்டை இழந்து

## யாழ். மாவட்டச் செயலரின் சொகுசு வாகனம் விபத்து!



யாழ்ப்பாணம், பெப்.24
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் ம.பிரதீபனின் தனிப்பட்ட சொகுசு வாகனம் நேற்று விபத்துக்குள்ளானதில், மாவட்டச் செயலரின் மகன் மற்றும் அவரது 15

## கூட்டுமுயற்சியைத் தட்டிக்கழிக்கும் தீர்மானத்தை மீள்பரிசீலியுங்கள்!

தமிழரசுக் கட்சியிடம் கோருகின்றார் கஜேந்திரகுமார் எம்.பி.

யாழ்ப்பாணம், பெப்.24
புதிய அரசியலமைப்பு உருவாக்கம், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பவற்றில் நாடாளுமன்றத்தில் இணைந்து 15

## வத்திராயனில் தாக்கப்பட்டவர் உயிரிழப்பு!

» 15

## மயங்கி வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்., பெப்.24
புத்தூரில் உள்ள உணவகம் ஒன்றில் வேலை செய்து வந்த 14

## மூதாட்டி சடலமாக மீட்பு

» 15



## இணைபிரியாமல் வாழ்ந்து ஒன்றாக உயிர்நீத்த தம்பதி

மட்டுவிலில் நடந்த மனதை உருக்கும் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப்.24
இணைபிரியாது வாழ்ந்த தம்பதி ஒன்றாகவே உயிர்பிரிந்த மனதை உருக்கும் சம்பவம் 15



'மோடி வித்தையள் திசைகாட்டி ஆட்சியில பலிக்குமா எண்டு பாப்பம்'

சங்குச்சின்னத்தில்

# உள்ளூராட்சித் தேர்தலுக்காக 9 தமிழ்க்கட்சிகள் கூட்டணி!

யாழ்ப்பாணம், பெப். 24
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும், சில தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்ற நிலையில், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை இணைந்து எதிர்கொள்வது என்று அவை தீர்மானித்துள்ளன. இந்தக் கூட்டணியில் 9 கட்சிகள் இணைந்து தேர்தலை எதிர்கொள்ளவுள்ளன.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகளுக்கும் சக தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் 15



மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 23.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3998 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 12 21 76 77 |
| விசேட எழுத்து | H |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 23.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1065 |
| வெற்றி இலக்கிளம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 07 18 58 62 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 23.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 024 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 0 9 0 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 23.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2104 |
| ஆங்கில எழுத்து | G |
| சுப்பர் இலக்கம் | 22 |
| வெற்றி இலக்கங்கள் | 20 32 35 41 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 23.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5756 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 7 0 9 3 2 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 23.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1786 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 19 26 63 81 |
| விசேட எழுத்து | A |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 23.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 331 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 9 3 2 8 |

# நாம் ஒன்றுசேராவிடின் வரலாறு மன்னிக்காது

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், பெப்.24**

**தமிழர்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தைப் பொறுத்தமட்டில், அரசாங்கம் எமக்கான தீர்வுத்திட்டத்தைத் தரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. மாறாக நாமனைவரும் ஒன்றிணைந்து, தமிழர்கள் சார்ந்து ஒரு கூட்டுநிலைப்பாட்டை எடுக்கவேண்டும். இது தனிமனித விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால், ஒரு இனத்தின் அடையாளத்தை முன்னிறுத்திய பயணமாகும்.**

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்த கலந்துரையாடலுக்கு கடிதம் மூலம் அழைப்பு விடுத்த கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு பதிலளித்து இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கடிதமொன்றை அனுப்பி வைத்தமை தொடர்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

சுமார் 80 வருடங்களாக தமிழர்களாகிய நாம் உரிமைப்பசியுடன் வாழ்கிறோம். அந்த உரிமைப்பசிக்காக நாம் செய்த தியாகங்கள் அளப்பரியவை.

இவ்விடயத்தில் நாம் (தமிழரசுக் கட்சி) மாத்திரமன்றி, தமிழ்த்தேசியத்தை நேசிக்கும் சகல கட்சிகளும் இணைந்து ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். ஆகவே தமிழர்கள் ஒரு பலமான சக்தியாக ஒன்றுபட்டு அவர்களது கோரிக்கையை முன்வைக்கவேண்டும் என்றே சர்வதேச சமூகம் விரும்புகிறது. அவ்வாறிருக்கையில் நாம் எமக்குள் போட்டியிட்டு, மனக்கசப்புகளுடன் ஒருவரிலிருந்து ஒருவர் விலகி நின்றால், எமக்கான தீர்வென்பது கிட்டாமலே போய்விடும்.

மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கு அமைய செயற்படவேண்டும். மாறாக அதிலிருந்து விலகிச்சென்றால் வரலாறு ஒருபோதும் எம்மை மன்னிக்காது - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 23.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0464 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| B | 6 2 6 5 8 6 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 23.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2730 | V | 24 29 59 67 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 23.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 02 46 54 73 | 4891 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 23.02.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0629 | 18 29 35 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 23.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| கன்னி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 03 06 10 24 | 4442 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 23.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 05 | 31 32 43 49 | 1906 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 23.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 02 14 55 56 | 2556 |

வாகன விலையேற்றம்

# இறக்குமதி வரியை குறைக்கத் திட்டம்

கொழும்பு, பெப்.24

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு விதிக்கப்படும் வரிகளைக் குறைப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதம் முதலாம் திகதி, தனியார் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு சுமார் நான்கு ஆண்டுகளாக நடைமுறையிலிருந்த தற்காலிகத் தடையை அரசாங்கம் நீக்கியது.

எனினும் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரிகளினால் புதிய வாகனங்களின் விலைகள் உயர்ந்துள்ளதாக இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

உதாரணமாக, வேகன்ஆர் போன்ற ஒரு சிறிய காரின் விலை சுமார் ஏழு மில்லியனிலிருந்து 10 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

புதிய முச்சக்கரவண்டியின் விலை இப்போது இரண்டு மில்லியனை நெருங்குகிறது, டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட சமீபத்திய முச்சக்கர வண்டியின் விலை 1.95 மில்லியன் ரூபாவாக உள்ளது. இந்தநிலையில் தற்போதைய சந்தைப் போக்குகளின் அடிப்படையில், இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் மீது விதிக்கப்படும் வரிகளைக் குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

# கணேமுல்ல படுகொலை இதுவரை 8 பேர் கைது

கொழும்பு, பெப். 24

கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் தொடர்புடைய மேலும் மூன்று சந்தேகநபர்களை பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர். அதன்படி, இந்தக் கொலை தொடர்பாக இதுவரை 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று கைதுசெய்யப்பட்ட மூன்று பேரில் ஒருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு முந்தையநாள் துப்பாக்கிச்சூடு நடத்தியவருக்குத் துப்பாக்கியைக் கொண்டுவந்து வழங்கிய குற்றத்திலும் மற்றைய இருவரும் துப்பாக்கிச்சூட்டுக்குப் பின்னர் துப்பாக்கிச்சூடு நடத்தியவரையும் மற்ற சந்தேகநபரையும் முச்சக்கரவண்டியில் ஏற்றிச்சென்ற குற்றத்திலும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)


# விசேட தேவையுடையோர் கல்வியில் விசேட கவனம்

கொழும்பு, பெப். 24

கல்வி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் விசேட தேவையுடைய பிள்ளைகளின் உயர்கல்வி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசேட தேவையுடையவர்கள் பொதுச் சமூகத்தில் இயல்பான வாழ்க்கையை முன்னெடுக்கத் தேவையான சமூக அங்கீகாரம் வழங்கப்படவேண்டும். கல்வியில் ஒரு மிகப் பெரிய மாற்றத்துக்கு நாம் இப்போது தயாராகி வருகிறோம். விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் கல்வி முறைக்கு விசேட கவனம் செலுத்தப்படும். அனைத்து பாடசாலைகளிலும் விசேட தேவையுடைய பிள்ளைகள் வழமை போன்று கல்வியில் ஈடுபடுவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ச-இ)



# பயணப்பொதியிலிருந்து தோட்டாக்கள் மீட்பு

கொழும்பு, பெப். 24

பண்டாரவளைப் பகுதியில் பேருந்தொன்றின் பின்பகுதியில் வைக்கப்பட்டிருந்த பயணப்பொதி ஒன்றிலிருந்து இயங்குநிலையிலுள்ள 123 தோட்டாக்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்றிலேயே அவை மீட்கப்பட்டன.

எனினும் சந்தேகநபர்கள் எவரும் கண்டறியப்படவில்லை என்றும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் பண்டாரவளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடுக்குநாறிமலையில் சிவராத்திரிக்கு கெடுபிடி

## ஆலயப் பூசகர் உட்பட இருவர் பொலிஸ் நிலையத்துக்கு அழைப்பு

**வவுனியா, பெப்.24**

**வெடுக்குநாறிமலையில் இம்முறை சிவராத்திரி விரத பூஜைகள் காலை முதல் மாலை 6 மணிவரை முன் னெடுக்கப்படவுள்ளன. நெடுங்கேணி வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி தினம் தொடர்பாக ஆலய பூசாரியார் மதிமுகராசா மற்றும் முக்கியஸ்தரான பூபாலசிங்கம் ஆகியோரை நெடுங் கேணி பொலிஸார் அழைத்து விவரங்களைப் பெற்றுள்ளனர்.**

இதுதொடர்பாக ஆலயத்தின் பூசகர் மதிமுகராசாவிடம் கேட் டபோது,

இம்முறை சிவராத்திரி விரத பூஜைகளை காலை முதல் மாலை 6 மணிவரை முன்னெ டுப்பதற்கு நாம் தீர்மானிக்கப் பட்டுள்ளது. 6 மணியின் பின் னர் பிறிதொரு பகுதியில் சிவ னுக்கான இரவு அனுஸ்டானங் களை செய்வதற்கும் ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன - என் றார். அதேவேளை கடந்த காலங்களில் நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங் கேஸ்வரர் ஆலயம் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதி கள் தொல்பொருட்திணைக்க ளத்தின் கீழ் உள்ளதாகத் தெரி வித்து, அந்தத் திணைக்களத் தினர் மற்றும் நெடுங்கேணிப் பொலிஸாரால் பொதுமக்கள் வழிபாடுகளை மேற்கொள்வ தற்கு பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

அது தொடர்பான வழக்கில் கைதுசெய்யப்பட்ட 8 பேரையும் வழக்கிலிருந்து முழுமையாக விடுதலை செய்ததுடன் பொலி ஸாரால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கையும் நீதிபதி தள்ளுபடி செய்திருந்தார் என்பது குறிப்பி டத்தக்கது. (ச-110)

## ஊடகர் சாமுதிதவுக்கு பலத்த பாதுகாப்பு

கொழும்பு, பெப்.24

இலங்கையின் பிரபல ஊடகவியாலாளர் சாமுதித சமரவிக்ரமவின் உயிருக்கு அதி கரித்த அச்சுறுத்தல்கள் மற்றும் அவரு டன் நேர்காணல் செய்த 4 பேர் கொல் லப்பட்டதைத் தொடர்ந்து அவருக்குக் கூடுதல் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் உறுதிப்படுத்தியுள்ளார்.

சமுதித சமரவிக்ரம பேட்டி கண்ட நான்கு பேர் சமீப காலங்களில் மர்மமான சூழ்நி லையில் கொல்லப்பட்டனர்.

மித்தெனியாவில் சமீபத்தில் நடந்த துப் பாக்கிச்சூடு உள்ளிட்ட சம்பவங்கள் குறித்த கவலைகளை மேற்கோள்காட்டி, தனக்கு பாதுகாப்பு வழங்குமாறு சமு தித்த அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத் திருந்தார்.

இந்தநிலையிலேயே அவருக்கு 4 பாதுகாப்பு அதிகாரி அதிகாரிகள் வழங் கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படு கின்றது. (ச-125)

## புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் தயாரிப்பதற்கு குழு நியமனம்

கொழும்பு, பெப். 24

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவைத் தயா ரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அதன்படி குறித்த சட்டவரைவைத் தயாரிப்பதற்காக சட்ட நிபுணர் ரின்சி அல்சுகுலரத்ன தலைமையி லான குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று நாடாளு மன்ற அமர்வின்போது அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ச-இ)

## துப்பாக்கிகளுடன் பெண் கைது



கொழும்பு, பெப். 24

ஹபராதுவ பொலிஸ் பிரிவின் வெல்லேகேவத்த பகு தியிலுள்ள வீடொன்றில் வெளிநாட்டில் தயாரிக்கப் பட்ட ரிவோல்வர் ரக துப்பாக்கிகள், தோட்டாக்கள் மற்றும் வாள்களுடன் பெண்ணொருவர் நேற்றுமுன் தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேபகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# தகவல் தந்தால் 10 இலட்சம் ரூபா

## பொலிஸார் அறிவிப்பு

கொழும்பு, பெப். 24

குற்றவாளிகள் மற்றும் துப்பாக்கிகள் குறித்துத் தகவலளிக்கும் பொதுமக்களுக்குப் பணப்பரி சில்கள் வழங்கப்படும் எனப் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

குற்றவாளிகள் தொடர்பில் 1997 என்ற இலக் கம் ஊடாகத் தகவல்களை வழங்கமுடியும்.

டி 56 ரகத் துப்பாக்கி குறித்த தகவல்களை வழங்கினால் 10 லட்சம் ரூபா வரை பணப்பரி சில் வழங்கப்படும்.

தகவல் வழங்குபவர்களின் இரகசியமும் பேணப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். (ச-இ)




வெண்ணெய் திரண்டு வரேக்க தாழியை உடைக்கவெண்டே இஞ்ச சிலர் வெள்ளையும் சொள்ளையுமா உலாத்திக்கொண்டு திரியினம். முந்தநாள் பார்லிமெண்டில பாதுகாப்பு ஆலோ சனைச் சபையின்ர கூட்டம் நடந்திருக்கு. அந்தக் கூட்டத்தில முன்னணியின்ர கஜேந்திரகுமார் 'எங்கள் மேல வீணா வழக்கு, விசாரணை எண்டு பொலிஸ்காரர் பழிவாங்கிற வேலையளில நிக்கினம்' எண்டு சொல்லி கிட்டடியில நடந்த சில சம்பவங்களை அங்க சொல்லியிருக்கிறார். அதில முக்கியமானது முன்னணியின்ர பேரில 'தையிட்டி விகாரையை இடிக்க வாரீர்' எண்டு பொய்யா ஒரு நோட்டீஸ் பேஸ்புக்கில போடுப்பட்ட விசயம் தான். அந்த நோட்டீஸ் தான் போடேலை எண்டு கஜேந்திர குமார் அடுத்தநாளே தன்ர பேஸ்புக்கிலையும், எக்ஸ் தளத்திலையும் பதிவு போட்ட பிறகும் 'நீங் கள் தான் அந்தப் போஸ்டரை போட்டனீங்கள்' எண்டு பொலிஸ்காரர் ஏன் வழக்குப் பதிஞ்சவை? எதுக்கு விசாரணை செய்யினம்? எண்டு தனக்குத் தெரியேலை எண்டு கஜேந்திரகுமார் இந்தக் கூட்டத்தில சொல்லி இருக்கிறார்.

பட்ஜெட் காலமெண்டதால பார்லிமெண்டுக்குப் போறதுக்காக இப்ப கஜேந்திரகுமார் கொழும்பில தான் நிக்கிறார். எண்டாலும் அங்கையும் அவரை நிம்மதியா இருக்கவிடாமல் கே.கே.எஸ் பொலிஸ் காரர் அனுப்பின ஏதோ உத்தரவை தனிச்சிங்களத் தில கொழும்புப் பொலிஸ்காரர் கொண்டுபோய் கஜேந்திரகுமாரிட்டக் குடுத்திருக்கினம். ஆனால் அவர் 'இதை தமிழில இல்லாட்டி இங்கிலிஷில தாங்கோ. சிங்களம் விளங்காது' எண்டு சொல் லியும் திரும்பத் திரும்ப சிங்களத்திலையே கொண் டந்து குடுத்திருக்கினம். இதையும் அந்தக் கூட்டத்தில கஜேந்திரகுமார் பாதுகாப்பு அமைச்சின்ர செயலாள ரின்ர கவனத்துக்கு கொண்டந்திருக்கிறார்.

இப்பிடி சிங்களத்தில பொலிஸ்காரர் கொண்டு வாறதை நான் தமிழில இல்லாட்டி இங்கிலிஷில தாங்கோ எண்டு திருப்பி விட, அதையே காரணமாக் காட்டி, நான் அவையின்ர விசாரணைக்கு ஒத்து ழைக்கேலை எண்டு சொல்லி பிடியாணை வாங் கப் பிளான் பண்ணுகினமோ எண்டும் எனக்குச் சந்தேகமா இருக்கு' எண்டும் அவர் சொன்னதை, பாதுகாப்பு அமைச்சின்ர செயலாளர் கேட்டிட்டு 'சரி இதைப்பற்றி நான் பொலிஸுக்குச் சொல்லி, உரிய நடவடிக்கை எடுக்கிறன்-எண்டிருக்கிறார்.

இப்பிடி ஒரு விசயம் சீரா நடந்தால், அது உந்த லோச்சனா எம்.பி.க்குப் பிடிக்காதே. அம்பில் பிறந்த அந்த எம்.பி. சடாரெண்டு எழும்பி - இவையள் தையிட்டி விகாரையை இடிச்சு, 83 ஆம் ஆண்டு வந்த மாதிரி ஒரு இனக்கலவரத்தைக் கொண்டு வாறதுக்கு பிளான் பண்ணுகினம். இதை நான் ஒருக்காலும் விடமாட்டன். இவை தையிட்டியை இடிக்கிறதைத் தடுக்கோணும் எண்டு நான் முறைப்பாடு செய்யப்போறன்' எண்டு சொல் லியிருக்கிறார். அதுக்கு ' உடனேயே அப்பிடி ஒரு முறைப்பாட்டைச் செய்யுங்கோ- எண்டு அரச தரப்பும் தட்டிக்குடுத்திருக்குது. விகாரை கட்டிற அரசாங்கத்துக்கு இப்பிடி பீடி எடுத்துக்குடுக்கிறவை இருக்குமட்டும் ஒரு பிரச்சினையுமில்லைக் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய ராசிபலன்

**மேடம்:** அரசாங்கக்காரியங்கள் இழுபறியாகக்கூடும். சகோதரவகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வெளியூர் செல்ல நேரிடும்போது கைப் பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும்.

**மிதுனம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாய்வழியில் சில சங்கடங்களைச் சந்திக்கநேரிடும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். பிற்பகலுக்கு மேல் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும்.

**கடகம்:** பிற்பகலுக்கு மேல் எதிலும் நிதானமாக செயற்படவும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர் வருகையால் வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதரவகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்களின் சந்திப்பு சங்கடம் தருவதாக இருக்கும்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டு. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கக்கூடும். பழைய கடன்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. சிலருக்கு மகான்களின் தரிசனமும் ஆசிகளும் கிடைக்க வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** சிறு அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்கள் வருகை உற்சாகம் தரும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பரபரப்பாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். சகோதரவகையில் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**மகரம்:** சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள். குடும்பம் தொடர்பான வேலைகளுக்காக பயணம் மேற்கொள்ளநேரிடும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும்.

**கும்பம்:** மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் உண்டாகும். குலதெய்வக் கோயிலுக்குச் சென்று நேர்த்திக் கடனை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். ஆனால், தேவையான பணம் கையிலிருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். நவீனரக ஆடைகளை வாங்கி மகிழும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

# 'கிளீன் சிறீலங்கா' செயற்றிட்டம் சுழிபுரத்தில்



யாழ்ப்பாணம், பெப்.24

சுழிபுரம் கடற்கரைப் பகுதிகளில் 'கிளீன் சிறீலங்கா' செயற்றிட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

சங்கானைப் பிரதேச செயலர் கவிதா உதயகுமார் தலைமையில் சுழிபுரம் திருவடிநிலை, புளியந்துறை, சவுக்கடி ஆகிய கடற்கரைப் பகுதிகளில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது .

இதன்போது சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர், வலிகாமம் மேற்குப் பிரதேச சபையினர், பொதுமக்கள், சங்கானைப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராமஅலுவலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-125)

# அழகுக்கலை நிபுணர்களின் ஆற்றுகை நிகழ்வுகள்

கிளிநொச்சி, பெப்.24

அழகுக்கலை நிபுணர்களுக்கு களம் அமைத்துக்கொடுக்கும் முகமாக 'மாற்று மோதிரம்' எனும் நிகழ்வு இம்முறை கிளிநொச்சியில் எதிர்வரும் 2ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அருந்ததி நிறுவனத்தின் பணிப்பாளர் கே. மேகலா தெரிவித்துள்ளார்.

இதில் ஏராளமான அழகுக்கலை நிபுணர்களின் ஆற்றுகைகள் இடம்பெறவுள்ளதுடன் கண்காட்சிகளும் இடம்பெறவுள்ளன. (ச-41-27)




# மரம் முறிந்து வீழ்ந்ததில் முச்சக்கரவண்டி பாதிப்பு

வவுனியா, பெப். 24

வவுனியா குருமன்காடுப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் முச்சக்கரவண்டியொன்று முழுமையாகச் சேதமடைந்துள்ளது.

குருமன்காடு சந்திப் பகுதியிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றின் முன்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி மீதே மரம் முறிந்து வீழ்ந்துள்ளது.

இதன்போது எவருக்கும் காயமேற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-22,110, 18)



# நயினாதீவில் 'க்ளீன் சிறீலங்கா'

யாழ்ப்பாணம், பெப்.24

'கிளீன் சிறீலங்கா' வேலைத்திட்டத்துக்கு அமைவாக நயினாதீவு கடற்கரையைச் சூழவுள்ள பகுதிகளில் ஒதுங்கியுள்ள பிளாஸ்ரிக் கழிவுப் பொருள்கள் மற்றும் ஏனைய கழிவுகள் கடந்த வெள்ளிக்கிழமை மூன்றாம் கட்டமாக அகற்றப்பட்டுள்ளன.

நயினாதீவு வடக்குக் கடற்தொழிலாளர் சங்கம் வேலணைப் பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது. (ச-41-66)



# வவுனியாச் சாரணர்களால் துப்புரவுப்பணி

வவுனியா, பெப். 24

சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் ரொபர்ட் பேடன் பவல் பிரபுவின் 168 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, இலங்கை சாரண சங்கத்தின் வவுனியா மாவட்டச் சாரணர்களால் வவுனியாவிலுள்ள புகையிரத நிலையங்களை அழகுபடுத்தும் நிகழ்வு மாவட்ட ஆணையாளர் யோ.கஜேந்திரன் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

புகையிரத நிலையங்களைச் சூழவுள்ள பகுதிகளிலுள்ள பிளாஸ்ரிக், பொலித்தீன் மற்றும் ஏனைய கழிவுகளும் அகற்றப்பட்டன. (ச-25, 18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# காற்றலையில் விடைபெற்ற உயிரோசை

'பி.பி.ஸி. ஆனந்தியக்கா' நேற்றுமுன்தினம் லண்டனில் காலமாகிவிட்டார். ஈழப்போரின் ஓர் அடையாளமாக, சாட்சியாக, நேர்மையான ஊடகவியலாளராக, துணிச்சலான பெண்ணாக பல பரிமாணங்களைக் கொண்டிருந்தவர் 'பி.பி.ஸி. ஆனந்தியக்கா' யாழ்ப்பாணம், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆனந்தி, ஆரம்பத்தில் இலங்கை வானொலி ஊடாகவே ஒலிபரப்புத்துறைக்குள் நுழைந்தார். ஆரம்பத்தில் நாடகங்களுக்குக் குரல் தருநராக இருந்த அவர், பின்னர் படிப்படியாக அறிவிப்பாளர், செய்தி வாசிப்பாளர் என்று தன் ஒலிபரப்புத்துறைத் தளத்தை விசாலித்தார். ஆனால் காலமும், சூழலும் அவரை இலங்கையில் இருந்து பெயர்த்து இங்கிலாந்தில் குடியமரவைத்தன. மண்ணை விட்டுப் பெயர்ந்தபோதும், அவர் தன் துறையை விட்டு விலகவில்லை. சர்வதேசரீதியில் நடுநிலையான ஊடகமாகப் பெயரெடுத்த பி.பி.ஸி.யில் பகுதிநேர நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இணைந்தார். ஆனாலும் அவரது திறனும்,ஆளுமையும் மிகவிரைவாகவே அவரை நிரந்தர நிகழ்ச்சித் தயாரிப்பாளராக்கி, பின்னர் தமிழ்ச் சேவைக்குப் பொறுப்பாளராக்கின. 2005 மே மாதம் வரை பி.பி.ஸி.,யோடு இணைந்திருந்த அவர், பின்னர் அந்தத் துறையில் இருந்து விலகிய அவரின் குரல், நேற்றுமுன்தினத்தோடு காற்றலையோடு கொண்டிருந்த பிணைப்பை அறுத்துக்கொண்டுவிட்டது.


ஈழப்போர் என்றால் நினைவுக்குவரும் விடயங்களில் 'பி.பி.ஸி. ஆனந்தியக்கா' தவிர்க்கமுடியாதவர். போர்க்காலத்தில் புனைவுகளையும், இனக்குரோதத்தையும் மட்டுமே கக்கிக்கொண்டிருந்த இலங்கையின் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் மக்கள் தம்மைச் சுற்றி நடக்கும் சம்பவங்களையும், அவற்றின் உண்மைத் தன்மைகளையும் அறிந்துகொள்வதென்பது முயற்கொம்பே. பல சர்வதேச ஊடகங்களும் அரசு கொடுக்கும் தகவல்களை அப்படியே திருப்பிச்சொல்லும் கிளிப்பிள்ளைகள் போலவே இருந்தன. இந்தநிலையில்தான் பி.பி.ஸி, வெரித்தாஸ் ஆகிய இரு சர்வதேச வானொலிச்சேவைகளே உள்ளதை உள்ளபடி சொல்வனவாக இருந்தன. பி.பி.ஸி. தமிழ்ச் சேவையில் இலங்கை தொடர்பான செய்திகளைப் பெரும்பாலும் ஆனந்தியே தொகுத்து வழங்கினார். பக்கச்சார்பில்லாமல் அவர் ஈழத்தின் போர் நிலைவரங்களை வெளிப்படுத்தியதால், தமிழ் மக்களிடையேயும், விடுதலைப்புலிகளிடையேயும் ஆனந்திக்குத் தனி மரியாதை இருந்தது. பெரும்பாலான தமிழ்மக்களின் வீடுகளில் இரவுநேரத்தில் டைனமோவில் இயங்கும் வானொலிகளில் பி.பி.ஸி. தமிழோசையைக் கேட்ட பின்னரே அன்றையநாள் முழுமை பெறும். அதனால்தான் எந்தவொரு சர்வதேச ஊடகத்துக்கும் நேர்காணல் கொடுப்பதைத் தவிர்த்து வந்த தேசியத்தலைவர் மேதகு பிரபாகரன், பி.பி.ஸி.க்கு மட்டும் அந்தக் கொள்கையைத் தளர்த்தினார். தேசியத்தலைவரை வன்னிக்கு வந்து நேர்காணல் செய்தவர் 'பி.பி.ஸி. ஆனந்தியக்கா'. அவருக்கு தன் கையாலேயே உணவு சமைத்துப் பரிமாறுமளவுக்கு தேசியத்தலைவரின் அபிமானத்தையும் வென்றிருந்தவர். அந்த நேர்காணல் சர்வதேசரீதியில் விடுதலைப்புலிகள் பற்றிய விம்பத்தை உயரச்செய்ததோடு, தமிழர்களின் போராட்ட நியாயத்தையும் வெளிகொணர்ந்திருந்தது.

கணீரென்ற , தெளிவான தமிழ் உச்சரிப்புக்குச் சொந்தக்காரியாக இருந்த 'பி.பி.ஸி. ஆனந்தியக்கா' ஊடக அறத்திலிருந்து எந்தக்கணத்திலும் விலகாதவராக இருந்தார். ஊடகத்துறையில் தமிழ்ப் பெண்களும் சர்வதேசரீதியில் சாதிக்கமுடியும் என்பதற்கும் 'பி.பி.ஸி. ஆனந்தியக்கா' எடுத்துக்காட்டாகவும் விளங்கினார். காற்றலை வழியே உண்மையின் வீச்சாக நம்மை எட்டிய அந்தக் குரல் இனிமேல் கேட்கப்போவதில்லை. 'பி.பி.ஸி. ஆனந்தியக்காவுக்கு' அஞ்சலி!


**நாளொரு நல்வார்த்தை**

உலக வரலாற்றிலே வலிமையே நியாயத்தை உருவாக்குகிறது என்று சொல்லப்படுகிறது
நம்முடைய காலத்திலே நியாயமே வலிமையை உருவாக்குகிறது என்று மாற்றிக்காட்டவேண்டும்.

—ஆபிரகாம் லிங்கன்




# பாதாளக்குழுக்களின் பின் இயங்குகிறதா மறைகரம்?



## விசாரணை செய்யப்படுமென ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 24

**பாதாளக்குழுக்களுக்கிடையிலான மோதலின் பின்னணியில் மறைமுகக் கரமொன்று உள்ளதா, இவற்றை எவரேனும் வழிநடத்துகின்றனரா என்ற சந்தேகம் உள்ளது. அது தொடர்பில் விசாரணை நடத்தப்படுகின்றது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கண்டிக்கு நேற்றுச் சென்றிருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தலதாமாளிகையில் வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் தெரிவிக்கையில்,

தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. பாதாளக்குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. அது பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறவில்லை.

எனினும், பாதாளக்குழுக்களின் வலைப்பின்னலானது நாசகாரமானது. பல்வேறு துறைகளிலும் அவர்களின் தொடர்புகள் உள்ளன.

பாதாளக்குழுக்களை முழுமையாக ஒடுக்குவதற்கு

முயற்சித்துவருகின்றோம். அந்த வேலையை எம்மால் செய்யமுடியும் - என்றார். (ச-44)

# அலோசியஸ் விடுதலை

கொழும்பு, பெப். 24

ஆறுமாதகால சிறைதண்டனை விதிக்கப்பட்டிருந்த மெண்டிஸ் டிஸ்டில்லரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட இருவர் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

3.5 பில்லியன் ரூபா வற்வரியைச் செலுத்தத் தவறிய குற்றச்சாட்டுக்கு அமைய இந்தச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, தண்டனைக் காலம் முடிந்த பின்னர் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர் என சிறைச்சாலை வட்டாரம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# மாடுகள் கடத்தல்; சந்தேகநபர் கைது

சாவகச்சேரி, பெப். 24

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மாடுகளை ஏற்றிவந்த பாரவூர்தி சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்று மடக்கிப்பிடிக்கப்பட்டு அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். கொடிகாமம் பிரதேசத்திலிருந்து மூடிய பாரவூர்தியில் 17 மாடுகளைச் சட்டவிரோதமாக ஏற்றிவந்தவேளையே இந்தக் குற்றச் செயல் முறியடிக்கப்பட்டது. சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்குட்படுத்த சாவகச்சேரிப்பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-28)

# அவசர சிகிச்சைப்பிரிவில் சிவாஜிலிங்கம்

சுகவீனம் காரணமாக தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்றுவருகின்றார். இதற்கு முன்னதாக சுகவீனம் காரணமாக அவர் கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# புதிய மோ.சைக்கிள் இனி ரூ. 10 இலட்சம்

கொழும்பு, பெப்.24

இறக்குமதி செய்யப்படவுள்ள முதல் தொகுதி புதிய மோட்டார் சைக்கிளின் விலை சுமார் ஒரு மில்லியன் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனம் தங்கள் உத்தியோகப்பூர்வ வலைத்தளத்தில் புதிய பல்சர் மோட்டார் சைக்கிளின் விலை 934,950 ரூபா என அறிவித்துள்ளது.

இதேவேளை, புதிய டிஸ்கவர் மோட்டார் சைக்கிளின் விலை 7 இலட்சத்து 31,950 ரூபா எனவும் புதிய சிரி 100 ஈஎஸ் மோட்டார் சைக்கிளின் விலை 6 இலட்சத்து 37,950 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் பாதீட்டால் மக்களுக்கு ஏமாற்றம்

*மார்க்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 24
தேசிய மக்கள் சக்தியின் வரவு - செலவுத் திட்டம் வாக்களித்த மக்களுக்கு ஏமாற்றத்தைத் தந்துள்ளது என புதிய மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.க.செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.


யாழ்ப்பாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


சர்வதேச நாணயநிதியத்துக்கும், இந்திய முதலீட்டாளர்களுக்கும் ஏற்றவகையில் அரசாங்கம் இந்த வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்துள்ளது. உண்மையான ஒரு வரவு - செலவுத் திட்டத்தை அரசு முன்வைக்கவில்லை ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் பெரும்பான்மையான மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள். நாங்கள் ஒரு வளமான நாட்டினை உருவாக்குவோம் என்று கூறிய அரசாங்கம் இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நாட்டின் எதிர்காலத்தைப் பலவீனமாக்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25,125)

# வெள்ளை ஈ தாக்கம் வீரியம் தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி!

கிளிநொச்சி, பெப்.24

**கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ளை ஈ தாக்கம் பருவ மழையின் பின்னர் சடுதியாக அதிகரித்துள்ளதால் தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளது என்று தென்னைச் செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**





அவர்கள் மேலும் தெரிவிக்கையில், வெள்ளை ஈ தாக்கம் தென்னை மரங்களில் அதிகளவாக பரவி வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்த பல தடவைகள் மருந்துகள் தெளிக்கப்பட்டபோதிலும் அதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் தேங்காய் உற்பத்தி மிகப்பெரும் சரிவைக் கண்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் 20 ஆயிரம் தேங்காய் நாளொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையில் தற்போது 5 ஆயிரம் தேங்காய்களையே பெற முடிகின்றது.

இதனால் எமது வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளோம். தற்போது கிளிநொச்சியில் தேங்காயின் விலை 300 ரூபாவை எட்டியுள்ளது எனவே வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்காவிடின் மிகப் பெரும் தாக்கத்தைச் சந்திக்கநேரிடும் - என்றனர். (ச-113)



# வீதியில் குப்பைமேடு: அகற்றியது மாநகரசபை

யாழ்ப்பாணம், பெப். 24
யாழ். மாநகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பழம் வீதி, 4 ஆம் குறுக்குத்தெரு, குருசுமடம் பகுதியிலுள்ள வீதியொன்றில் அதிகளவான குப்பைகள் மற்றும் மருத்துவக் கழிவுகள் சூழ்ந்துகாணப்பட்ட நிலையில் யாழ். மாநகரசபை அதனை அகற்றிச் சுத்தம் செய்துள்ளது.

இது குறித்து வடமாகாணசபையின் அபயம் முறைப்பாட்டுச் சேவைக்கும் அறிவிக்கப்பட்டதுடன் பத்திரிகையிலும் செய்தி பிரசுரிக்கப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-25,125)





# காங்கேசன்துறையை வந்தடைந்த சிவகங்கை

யாழ்ப்பாணம், பெப்.24
காங்கேசன்துறை - நாகபட்டினம் கப்பல் சேவை நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் காலை நாகபட்டினத் துறைமுகத்திலிருந்து 83 பயணிகளுடன் காங்கேசன்துறைக்கு சிவகங்கைக் கப்பல் புறப்பட்டு நண்பகல் 12.15 மணியளவில் காங்கேசன்துறையை வந்தடைந்துள்ளது.

மூன்று மாதங்களுக்குப் பின்னர் இந்தக் கப்பல்சேவை நேற்றுமுன்தினம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல்சேவை செவ்வாய்க்கிழமை தவிர்ந்த ஏனைய 6 நாள்களும் சேவையில் ஈடுபடும் என்று கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது. (ச-125,27)



# விதிமுறைகளை மீறினால் அழககங்களுக்குப் பூட்டு

*ஆளுநர் அறிவுறுத்து*

யாழ்ப்பாணம், பெப். 24
வடக்கு மாகாண உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நியமத்துணை விதிகளின் சட்ட ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள விடயங்களை மீறிச்செயற்படும் அழகக நிலையங்களின் உரிமம் இரத்துச்செய்யப்படும் என வடக்கு ஆளுநர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண அழகக சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஒரு சில அழகக நிலையங்கள் சங்கத்தின் கட்டுப்பாடுகளை மீறிச்செயற்படுவது தொடர்பாகத் தெரியவந்துள்ளது.

இந்த நியமத்துணை விதியின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான தலைமுடி வெட்டுதல்கூட எவ்வாறு அமையவேண்டும் எனத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

நியமத்துணை விதியை மீறும் அழகக நிலையங்கள் தொடர்பில் அழககச் சங்கங்கள் அந்தந்த உள்ளூராட்சிமன்றங்களுக்கு முறைப்பாடு செய்யமுடியும்.

இதேவேளை, சட்டவிரோதச் செயல்கள் இடம்பெறுவதாக நம்பப்படும் அழகக நிலையங்கள் தொடர்பிலும் முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-66)

# யாழ்.பல்கலை விவசாயபீடத்தால் வேளாண் தொழில்நுட்பம் மாநாடு

யாழ்ப்பாணம், பெப்.24
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீடத்தினால் வேளாண் தொழில்நுட்பம் 2025 விவசாய மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக விவசாயபீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

விவசாயிகளையும் பல்கலைக்கழக மாணவர்களையும் இணைத்து விவசாயிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காணும் முயற்சியாகவே இந்த மாநாடு நடத்தப்பட்டது.

விவசாயபீட பீடாதிபதி பேராசிரியர் கே.பகீரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பல்கலைக்கழக விவசாயம் சார்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், வடமாகாண விவசாயப்பணிப்பாளர் ,விவசாயத்துறை சார்ந்த உத்தியோகத்தர்கள், விவசாயத்துறைசார்ந்த நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டனர். (ச-41-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கச்சாய் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப்போட்டி அதிபர் ஐ.தேவராஜன் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது . (ச-41-159)




புலமைப்பரிசில் பரீட்சை

# மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக ஞானப்பிரகாசம் ஆண்டகை பொறுப்பேற்பு!

மன்னார், பெப்.24

மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை நேற்றுப் பணிகளைப் பெறுப்பேற்றுக்கொண்டார்.

நேற்றுமுன்தினம் மடுத் திருத்தலத்தில் ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டிருந்த நிலையில் அவர் நேற்று பணிகளைப் பெறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

நேற்று மாலை மடு திருத்தலத்தில் இருந்து மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை மன்னார் தள்ளாடி அந்தோனியார் ஆலயத்தை வந்தடைந்தார். அங்கிருந்து மன்னார் பிரதான பாலத்தடிவரை அவர் மோட்டார் சைக்கிள் பவனியுடன் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கிருந்து விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட வாகனத்தில் ஏற்றப்பட்டு அங்கிருந்து பவனியாக மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்திற்கு இன்னிசை வாத்தியங்களுடன் அழைத்துச் செல்லப்பட்டார்.

மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் பணிப் பொறுப்பேற்றுக்கொள்ளும் நிகழ்வு, மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் பி.கிறிஸ்து நாயகம் அடிகளால் திருத்தூது மடல் வாசிக்கப்பட்டது. அதன்பின்னர் மன்னார் மறைமாவட்ட ஆயராக கடந்த 7 வருடங்களாக பணியாற்றிய இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் புதிய ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையிடம் புனித செபஸ்தியார் பேராலயத்தின் திறவுகோல் வழங்கப்பட்டது. அதன்பின்னர் புனித செபஸ்தியார் பேராலயத்தின் பங்குத்தந்தை அருட்தந்தை சுரேந்திரன் றெவல் அடிகளால் புதிய ஆயருக்கு நற்கருணை பேழைக் கான திறவுகோல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயரிடம் செங்கோல் வழங்கப்பட்டது.

அதன்பின்னர் மன்னார் மறைமாவட்டத்தின் 4ஆவது ஆயரான அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

(எ-56)



# கேதீச்சர யாத்திரிகர்களால் பாதையோர சிரமதானம்

யாழ்ப்பாணம், பெப்.24

சிவராத்திரியை முன்னிட்டு தொண்டைமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கடந்த வியாழக்கிழமை பாதயாத்திரை ஆரம்பமான நிலையில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தைத் தரிசித்து அங்கிருந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பயணித்தபோது பாதயாத்திரைக் குழுவினர் நல்லூரான் அலங்கார வளைவுப் பகுதியில் திடீர் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். அந்தப் பகுதியில் பொலித்தீன் உள்ளிட்ட கழிவுப்பொருள்கள் நிறைந்தும் நச்சுச்செடியான பார்த்தீனியச் செடிகள் வளர்ந்தும் காணப்பட்ட நிலையில் அவற்றை அகற்றி சுத்தம்செய்தபின்னர் யாத்திரிகள் அங்கிருந்து பாதயாத்திரையைத் தொடர்ந்தனர். (ச-41-66)





கிளீன் சிறிலங்காத் திட்டத்தின் கீழ், இராணுவத்தினரால் யாழ். முற்றவெளியில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு, கழிவுகளும் உடனடியாக அகற்றப்பட்டுவருகின்றன. (ச-25-17)

# முல்லைத்தீவு மாணவன் மாகாண ரீதியில் முதலிடம்!

முல்லைத்தீவு, பெப். 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விசுவமடு விஸ்வநாதர் தொடக்கப்பள்ளி மாணவனான கிசோதரன் அக்ஷயன் 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் 186 மதிப்பெண்கள் பெற்று மாகாண அளவில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.


அவரின் சாதனையை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரக அதிகாரி திருமதி ரம்யா பாராட்டி பரிசில் வழங்கிக் கௌரவித்தார். (ச-22,125)



# மாற்றுத்திறனாளர்கள் தடகளப்போட்டி

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் , யாழ். மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கிடையிலான தடகளப் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றன. தென்மராட்சிப் பிரதேச செயலக அணி 8 முதலிடத்தையும், அணி 10 இரண்டாமிடத்தையும், அணி7 மூன்றாமிடத்தையும் பெற்று மாவட்டரீதியில் தென்மராட்சிப் பிரதேச செயலக அணியினர் நான்காம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். (ச-25,9)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
25 • 12 • 1952



மறைவு
22 • 02 • 2025

எமது அன்பு நண்பன் ரஞ்சன் சிவபாதசுந்தரம்
அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி இந்திரகுமாரி சிவபாதசுந்தரம்

அவர்கள் நேற்றுமுன்தினம் (22.02.2025) சனிக்கிழமை
அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டுத் தாங்கொணாத்
துயரில் தவித்து நிற்கின்றோம்.

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
கண்ணிமைக்கும் நேரத்தில்
காலனுமைக் கவர்ந்து சென்றதேனோ?
கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் ஆழ்துயரில் வாடித் துடிக்கும் குடும்பத்தினருக்கும்,
நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஈர விழிகளுடன்

**Brisbane, Australia வாழ் உறவுகள்........**

(cr44402) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்பு அதிகாரத்துக்கு அமைய உள்ளூராட்சித் தேர்தல் திகதி தீர்மானம்!

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமையவே தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும். வேட்புமனுத் தாக்கல் நிறைவடைந்த பின்னர் தேர்தலுக்கான வாக்கெடுப்புத் திகதி அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சிகள் முன்வைத்த யோசனைகள் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். அரசியலமைப்பின் பிரகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாகத் தீர்மானம் எடுப்போம்.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மற்றும் பண்டிகைக் கால விடுமுறை தொடர்பில் எதிர்க்கட்சிகளின் அரசியல் பிரதிநிதிகள் தமது நிலைப்பாட்டை எடுத்துரைத்துள்ளார்கள். உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கு அமைய தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரல் மற்றும் திகதி வாக்கெடுப்பு திகதி தொடர்பில் ஆளும்தரப்பினர்தமதுநிலைப்பாட்டைக் குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல் திகதி இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை. அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாகவே தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும். வேட்புமனுத்தாக்கல் நிறைவடைந்ததன் பின்னரே தேர்தலுக்கான வாக்கெடுப்புத் திகதி அறிவிக்கப்படும். அனைவருக்கும் சாதகமான வகையில்தான் தேர்தல் திகதி அறிவிக்கப்படும். தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் போதுமான காலவகாசம் வழங்கப்படும் - என்றார். (எ-இ)

### கேள்வி அறிவித்தல்
### வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
### சபை நிதி - 2025 (கட்டம் 1)

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது சபை நிதியினைக் கொண்டு கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.03.2024 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பொது அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாகவும் கேள்வி கோரப்படுகின்றது
04. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெ[illegible]றும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் கா[illegible]படி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதி[illegible] மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள[illegible]லதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. பெறுமதி சேர்வரி (VAT) பதிவினைக் கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் போது பெறுமதி சேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேணடும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதி சேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். (தொலைபேசி இல -021-205 8867 ) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 3:00 மணிவரை 2025.02.24 ஆம் திகதியில் இருந்து 2025.03.10 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். அவர்களிடமிருந்து 2025.02.24 ஆம் திகதியிலிருந்து 2025.03.10 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணி தொடக்கம் மாலை 3:00 மணி வரையிலும் 2025.03.11 ம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரையிலும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.
08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு 2025.03.11 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேணடும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப் பட்டுள்ளது.
10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2025.03.03 ஆம் திகதி மு.ப.10:00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: பிணை வைப்பு (ரூபா) | வேண்டப்படும் கேள்விப் பிணை: செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| NP/14/41(13)/4/Council/PI/2025/01 | நாகதம்பிரான் வீதி புனரமைத்தல் - ஊரெழு | 11.45 | 84 நாட்கள் | C6& C5 ( வீதி நிர்மாணம் ) | 77 நாட்கள் | 120,000.00 | 24.06.2025 |
| NP/14/41(13)/4/Council/PI/2025/02 | பற்றிமா வீதி புனரமைத்தல் - அச்சுவேலி மேற்கு | 6.36 | 60 நாட்கள் | C7& C6 ( வீதி நிர்மாணம் ) | 77 நாட்கள் | 64,000.00 | 24.06.2025 |
| NP/14/41(13)/4/Council/PI/2025/03 | போகபுரம் 1ஆம் 2ஆம் 3ஆம் குறுக்கு வீதிகள் புனரமைத்தல் - உரும்பிராய் தெற்கு | 4.86 | 60 நாட்கள் | C8& C7 ( வீதி நிர்மாணம் ) | 63 நாட்கள் | 50,000.00 | 10.06.2025 |
| NP/14/41(13)/4/Council/PI/2025/04 | வைரவர் கோவில் வீதி புனரமைத்தல் - புத்தூர் வடக்கு | 4.15 | 60 நாட்கள் | C8& C7 ( வீதி நிர்மாணம் ) | 63 நாட்கள் | 42,000.00 | 10.06.2025 |
| NP/14/41(13)/4/Council/PI/2025/05 | இராதம்பு வீதி புனரமைத்தல் - கோப்பாய் வடக்கு | 3.96 | 60 நாட்கள் | C8& C7 ( வீதி நிர்மாணம் ) | 63 நாட்கள் | 40,000.00 | 10.06.2025 |
| NP/14/41(13)/4/Council/PI/2025/06 | காட்டு வைரவர் கோயில் வீதி புனரமைத்தல் - உரும்பிராய் கிழக்கு | 3.05 | 45 நாட்கள் | C8& C7 ( வீதி நிர்மாணம் ) | 63 நாட்கள் | 31,000.00 | 10.06.2025 |
| NP/14/41(13)/4/Council/PI/2025/07 | காளிகோவில் வீதி புனரமைத்தல் (றோமன் கத்தோலிக்க பாடசாலை வீதி) - நீர்வேலி வடக்கு | 2.51 | 45 நாட்கள் | C8& C7 ( வீதி நிர்மாணம் ) | 63 நாட்கள் | 26,000.00 | 10.06.2025 |
| NP/14/41(13)/4/Council/PI/2025/08 | ஞானவைரவர் இணைப்பு வீதி புனரமைத்தல் - உரும்பிராய் வடக்கு | 1.68 | 45 நாட்கள் | C9& C8 ( வீதி நிர்மாணம் ) | 49 நாட்கள் | 17,000.00 | 27.05.2025 |
| NP/14/41(13)/4/Council/PI/2025/09 | டச்சு வீதி கிளை ஒழுங்கை புனரமைத்தல் - கல்வியங்காடு | 1.25 | 45 நாட்கள் | C9& C8 ( வீதி நிர்மாணம் ) | 49 நாட்கள் | 13,000.00 | 27.05.2025 |
| NP/14/41(13)/4/Council/PI/2025/10 | சிவகுல வீதி உப ஒழுங்கை புனரமைத்தல் - உரும்பிராய் மேற்கு | 1.02 | 45 நாட்கள் | C9& C8 ( வீதி நிர்மாணம் ) | 49 நாட்கள் | 11,000.00 | 27.05.2025 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2025.02.24



பணிநிலை வெற்றிடம்


பின்வரும் பணிநிலைகளுக்கு அனுபவமும் ஆற்றலும் மிக்கவர்கள் உடனடி வேலைவாய்ப்பு

- உதவி ஆசிரியர்கள்
- களச்செய்தியாளர்கள்
- ஒப்புநோக்குநர்கள்
- பக்கவடிவமைப்பாளர்கள்

ஆர்வமும் தகைமையும் உடையோர் மின்னஞ்சல் ஊடாகவோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
chiefeditor@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருத்தந்தை பிரான்ஸிஸின் உடல்நிலை கவலைக்கிடம்!

## அறிவித்தது வத்திக்கான் கர்தினால்கள் ஆலோசனை

உரோம், பெப். 24

திருத்தந்தையின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக, கத்தோலிக்க திருச்சபையின் தலைமையகமான வத்திக்கான் அறிவித்துள்ளது.

87 வயதான பாப்பரசர் பிரான்ஸிஸ் சுவாசிப்பதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இரண்டு நுரையீரல்களிலும் நிமோனியாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து உயிர்காப்புக் கருவிகளின் உதவியுடன் சிகிச்சை பெற்று வந்த அவரின் உடல்நிலை, கடந்த 24 மணிநேரமாக மோசமடைந்துள்ளதாக வத்திக்கான் அறிவித்துள்ளது.

பாப்பரசரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது என்றும், அவருடைய இறுதிச்சடங்குக்கான ஒத்திகைகள் இடம்பெற்றுள்ளன என்றும் முன்னதாகத் தகவல்கள் வெளிவந்திருந்தன. எனினும், இந்தத் தகவல்களையும், அவற்றை வெளியிட்ட ஊடகங்களையும் வத்திக்கான் கடுமையாகக் கண்டித்ததுடன், பாப்பரசரின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கையிட்டிருந்தது.

இவ்வாறான நிலையில், முதல்முறையாக 'திருத்தந்தையின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது' என்று வத்திக்கான் அறிவித்துள்ளது. இதையடுத்து, உரோமில் நேற்றுக் கர்தினால்கள் ஒன்றுகூடி கலந்துரையாடல் நடத்தியுள்ளனர். திருத்தந்தை சிகிச்சை பெற்றுவரும் மருத்துவமனைக்கு முன்பாக பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், பொதுமக்கள் பெருமளவில் திரண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## சபை நிதி - 2024/2025

01. வலிகாமம் மேற்கு பிரதேசசபை சபைப் நிதியைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. தேசிய போட்டிக்கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/2020 (i) ஆம் இலக்க 11.01.2021 ஆந் திகதிய04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019, ஆந் திகதிய 04/2016 (iii) ஆம் இலக்க 18.02.2021 ஆந் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தைச் சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம், அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

04. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில், நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை** (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் : 0212250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணிவரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் 24.02.2025ம் **திகதியிலிருந்து** 10.03.2025 ம் **திகதி வரை சனி ஞாயிறு தவிர்ந்த வேலைநாட்களில் காலை** 09.00 **மணிமுதல் பி.ப** 14.00 **வரை** மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000 (வரிநீங்கலாக) இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 11.03.2025 ம் **திகதி பி.ப** 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அலலது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து கேள்விசெல்லுபடியாகும் காலம். | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடி யாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 01 | (வட்டுக்கோட்டை பகுதி வீதி) சித்தங்கேணி பிள்ளையார் கோவில் வீதி 4ம் ஒழுங்கை திருத்தம் NP/14/41(17)/02/CF/01/2025 | 2.387 Mn. | 60 நாட்கள் | C8&C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 13.05.2025 | 24,000.00 | 10.06.2025 |
| 02 | (வட்டுக்கோட்டை பகுதி வீதி) கிராவோலை வீதி திருத்தம் NP/14/41(17)/02/CF/02/2025 | 1.245 | 45 நாட்கள் | C9&C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 29.04.2025 | 13000.00 | 27.05.2025 |
| 03 | (வட்டுக்கோட்டை பகுதி வீதி) கண்ணகை அம்மன் வீதி 1ம் ஒழுங்கை திருத்தம் NP/14/41(17)/02/CF/03/2025 | 1.609 | 45 நாட்கள் | C9&C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 29.04.2025 | 17000.00 | 27.05.2025 |
| 04 | (சங்கானை பகுதி வீதி) ஆஸ்பத்திரி தெற்கு வீதி திருத்தம் NP/14/41(17)/02/CF/04/2025 | 2.581 Mn. | 60 நாட்கள் | C8&C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 13.05.2025 | 26,000.00 | 10.06.2025 |
| 05 | (அராலி பகுதி வீதி) அராலி நொச்சிக்காடு வீதி திருத்தம் NP/14/41(17)/02/CF/05/2025 | 6.459 Mn. | 60 நாட்கள் | C7&C6 வீதிப் புனரமைப்பு | 77 நாட்கள் | 27.05.2025 | 65,000.00 | 24.06.2025 |
| 06 | (அராலி பகுதி வீதி) களவத்துறை விளையாட்டுக்கழக வீதி திருத்தம் NP/14/41(17)/02/CF/06/2025 | 1.499Mn. | 45 நாட்கள் | C9&C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 29.04.2025 | 15000.00 | 27.05.2025 |
| 07 | (சுழிபுரம் பகுதி வீதி) மூளாய் 2ம் ஒழுங்கை மிகுதி வேலை திருத்தம் (மாவடி மூளாய் வீதி 5ம் ஒழுங்கை (64) NP/14/41(17)/02/CF/07/2025 | 3.89 Mn. | 60 நாட்கள் | C8&C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 13.05.2025 | 39,000.00 | 10.06.2025 |
| 08 | (சுழிபுரம் பகுதி வீதி) இறாத்தலடி வீதி 1ம் ஒழுங்கை திருத்தம். NP/14/41(17)/02/CF/08/2025 | 1.224 Mn | 45 நாட்கள் | C9&C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 29.04.2025 | 13000.00 | 27.05.2025 |
| 09 | (சுழிபுரம் பகுதி வீதி) பொன்னாலை வீதி 1ம் ஒழுங்கை மிகுதி பகுதி திருத்தம் NP/14/41(17)/02/CF/09/2025 | 0.927 | 45 நாட்கள் | C9&C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 29.04.2025 | 10,000.00 | 27.05.2025 |
| 10 | தலைமை அலுவலகத்திற்கான முகப்பு அலுவலகம் அமைத்தல். NP/14/41(17)/02/CF/10/2025 | 15.00 Mn | 90 நாட்கள் | C5& C6 கட்டட நிர்மாணம் | 77 நாட்கள | 27.05.2025 | 150,000.00 | 24.06.2025 |

10. கேள்விதிறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்குபிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 06.03.2025 அன்று மு.ப.10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தசெலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம்.**
24.02.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் கடற்பரப்பில்
# தமிழக மீனவர்கள் 32 பேர் நேற்று கைது

மன்னார், பெப். 24

மன்னாருக்கு வடக்கே ஆழ்கடலில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த 32 இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலை இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கையின் போது மீன்பிடி நடவடிக்கைக்காக இந்திய மீனவர்கள் பயன்படுத்திய 5 விசைப் படகுகளும் இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைதான மீனவர்கள் தமிழ்நாட்டின் ராமேஸ்வரம், தங்கச்சிமடம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ச-இ)

## மணமகள் தேவை

1. Jaffna Town இந்து, கௌரவகுலம், (V),1996, சதயம், MSc, Software Engineering, Newzeland Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (50423)
2. நயினாதீவு - மல்லாகம் இந்து, கௌரவகுலம் (V), 1991, சதயம், Graduate, Newzeland, Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (28920)
3. புலோலி - கந்தரோடை, இந்து, கௌரவகுலம், (V),1987, பூராடம், MSc, Site Engineer,UK, Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
4. நயினாதீவு - வேலணை, இந்து, கௌரவகுலம் (V), 1995, பூரட்டாதி, PHD, USA, மணமகனுக்கு மணமகள் தேவை.
5. கொக்குவில், இந்து, கௌரவகுலம் (V), 1990, கேட்டை, Phd, கனடா Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (46762)
6. இணுவில் - உரும்பிராய், இந்து, கௌரவகுலம்,(V), 1989, பூசம், Masters in Accountancy, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (45173)
7. காரைநகர், இந்து, விஸ்வகுலம், 1979, உத்தரம், Engineer UK , Citizen Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. (44877)
8. மாதகல், இந்து, கௌரவகுலம், (V), 1993, விசாகம், A/L, Marketing Manger, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (44324)
9. புங்குடுதீவு, இந்து, கௌரவகுலம் (V), 1989, அத்தம், IT Engineer, Germany Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (44263)
10. இடைக்காடு - காரைநகர், இந்து, கௌரவகுலம் (V), 1992, சித்திரை, MBBS Doctor, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (44087)

எம்மிடம் எல்லா ஜாதியிலும், எல்லா நாட்டிலும் Unmarried மற்றும் Divorce மணமகள்களும், மணமகன்களும் உண்டு.

S.Sharma J.P.
www.thaalee.com
திருமண சேவை


Phone and whatsap:
077 539 3728

(ss.57579)(N-1)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம்
07 • 03 • 1937



மறைவு
20 • 02 • 2025

## கலாபூசணம் செ. விஸ்வலிங்கம்

### (ஸ்தபதி ஆச்சாரியார்)

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூசணம் செல்லையா விஸ்வலிங்கம் கடந்த 20.02.2025 வியாழக்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னக்குட்டி தம்பதியரின் மகனும், கோண்டாவில் கோகிலா வீதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், புஸ்பமலரின் அன்புக் கணவரும், ரமணிதரன், வசந்தி, ஜெகதீஸ்வரன், விஜயந்தி, பகீரதன், பாலராஜன், பிரபாகரன், தமயந்தி, சுபாஷினி, சியாமினி, ரோகிணிதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தி, விஜயரட்ணம், ஜெயகலா, தம்பிராசா, சுஜீத்தா, கலாரஞ்சனி, சுஜாதா, மனோகரன், பிரபு, தயாநந்தன், பிரசன்னா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், இராசதுரை, நாகம்மா, தெய்வானைப்பிள்ளை, இரத்தினம், அன்னபூரணம், ஆறுமுகதாசன் மற்றும் சின்னத்தம்பி (சோமு), சிவசுப்பிரமணியம் (குஞ்சு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராணிமலர், காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம், இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், ரஜீபன், சஞ்ஜீவன் - ஜரீனா, சுஜீவன், நிருபன் - சாருஹா, பிரதீபன், வினோபன், ஜெனிதா - கருணாகரன், ஜெனிசாந்தன் - ராகில்யா, ஜெனோதா - ராகவன், ஜெனார்த்தனன் - சோபிகா, ஜெயகீர்த்தன், ஜெயதீபன், டனுஷா, ஆகாஷ், சுமேஷ், சந்தோஷ், ரக்ஷனா, சபீனா, கஜீனா, ஆதிஷ், ஜெப்ரி, ஷாம், தனீஷ், சாணவி, ஜிஷ்னுதா, ஹஷ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும், ரட்ஷன், ஹஷ்வினி, ஜெஷ்வினி, ஜெமினா, ஜாமினி, அதிசயன், அதிசயா, சஸ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2025) செவ்வாய்க்கிழமை நீர்வேலி வடக்கு குறுக்கு வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வே வடக்கு,
நீர்வேலி.

தொடர்புகளுக்கு :
077 432 9153
074 190 6182

தகவல்
குடும்பத்தினர்

(cv 57594) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 08 . 1950

மறைவு
23 . 02 . 2025



### வைத்திலிங்கம் தர்மபாலச்சந்திரன் (அன்னப்பிள்ளை)

கொல்லங்கலட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தர்மபாலச்சந்திரன் அவர்கள் நேற்று (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் வசாவிளான் தெற்கை சேர்ந்த காலஞ்சென்ற மயில்வாகனம்-சாவித்திரி தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் விஜிதா (லண்டன்), தபோஜன் அவர்களின் அன்புத் தந்தையும் நிமலன் (லண்டன்), அவர்களின் அன்பு மாமனாரும் சிவபாலன், ஜெயபாலன், ரஞ்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஞானேஸ்வரி, கலைவாணி ஆகியோரின் மைத்துனரும் செந்தில்வாசன் (லண்டன்), செந்தில்குமரன் (லண்டன்), செந்தில்ராஜன் (கொழும்பு) ஆகியோரின் சித்தப்பாவும், லெனிஷன் (லண்டன்), வைஸ்மி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மடத்தடி கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 774 1149

## மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 05 . 1955

மறைவு
21 . 02 . 2025



### அருணாசலம் மனோரஞ்சி

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் மனோரஞ்சி அவர்கள் கடந்த 21.02.2025 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-லட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம்-பவளம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், அருணாசலம் அவர்களின் அன்பு மனைவியும், காஞ்சனா, காலஞ்சென்ற லதாசினி மற்றும் அரவிந்தி, பிரதாபன், துசாபரன், திவாகர் ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌதமி, சிவராசா, பிரதீபன் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற நடராசா மற்றும் வசந்தகுமார் (லண்டன்), விஜயகுமார், கோமதி ஆகியோரின் சகோதரியும், பிரியலதா, சிவாசினி, தஸ்வின், ஜருஷிகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 01.00 மணியளவில் காந்தாளம் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆறுமுகம் வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்
077 967 2340

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் **திரு.யே.இக்னேசியஸ்** (பிரபா) அவர்களின் அன்புத் தாயார் **அமரர்.யேசுதாசன் மேரி றோஸ்** அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாறுதல் பெற வேண்டுகின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர் **திரு.யே.இக்னேசியஸ்** (பிரபா) அவர்களின் அன்புத் தாயார் **அமரர்.யேசுதாசன் மேரி றோஸ்** அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாறுதல் பெற வேண்டுகின்றோம்.

புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.


## ஜோதிலிங்க தரிசனம்

மஹா சிவராத்திரியை முன்னிட்டு சோமநாதர் ஜோதிலிங்க தரிசனமும் ஆன்மீகக் கண்காட்சியும் யாழ்ப்பாணம், பிறவுண் வீதியிலுள்ள பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலைய சுகதாமம் மண்டபத்தில் இன்று முதல் 28ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை இடம்பெறவுள்ளது.

26ஆம் திகதி விசேடமாக சிவராத்திரி அன்று இரவு முழுவதும் தரிசிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

## மரண அறிவித்தல்

### தம்பையா அழகரத்தினம்



தோற்றம்
25.05.1937

மறைவு
21.02.2025

சுதுமலை தெற்கைப் பிறபிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா அழகரத்தினம் கடந்த 21.02.2025 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(cs. 57569) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்
077 710 9476

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 01 . 1946

மறைவு
22 . 02 . 2025



### புஸ்பகாந்தி சுப்பிரமணியம்

மானிப்பாய் மூத்ததம்பி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பகாந்தி சுப்பிரமணியம் அவர்கள் நேற்று முன்தினம் (22.02.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-மதியாபரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகலிங்கம்-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் பொன்னம்பலம், தில்லைநாதன், ஜெகநாதன், புஸ்பநாதன், சற்குணநாதன், மகேந்திரநாதன், ஜெயரூபகாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாரங்கன் (ஆசிரிய ஆலோசகர்-ஹட்டன்), ஜெயரங்கன் (கனடா), ஸ்ரீரங்கன் (கிராம அலுவலர்-சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), புஸ்பரங்கன் (அதிபர், யா/மாதகல் சென் ஜோசப் ம.வி), காந்திமதி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-யா/திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நளினி (ஆசிரியை), இந்திரா (கனடா), நளினா, அபிராமி (ஆசிரியை), ஜெகன் (திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்-வேலணை), ஆகியோரின் அன்பு மாமியாரும் கபினேஷ், லஜன் டினேஷன், ஹரிணி, வர்ஷயன், யதுஷன், அபிஷன், பிரகீஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

[illegible]தம்பி வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரவிழிகளுடன்
## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 . 05 . 1944

உதிர்வு 12 . 02 . 2018

யாழ். நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

அமரர் **செல்லையா சுப்பிரமணியம்**

**(ராஜ்மணி - ஆச்சாரியார்)**

*திதி: துவாதசி*

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஏழாண்டுகள் சென்றாலும் கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!**

அன்னாரின் ஏழாம் ஆண்டு ஆத்மசாந்தி பிரார்த்தனை இன்று (24-02-2025) திங்கட்கிழமை கனடாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

**குடும்பத்தினர்.**



தூய இலங்கை செயற்றிட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில், சேவ் ஏ லைப் நிறுவனம் மற்றும் படையினரின் பங்களிப்புடன் நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பலாலி வீதி, ஆடியபாதம் வீதி போன்றவை கடந்த வெள்ளிக்கிழமை துப்புரவு செய்யப்பட்டன. (ச-25, 9)

## பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம் (வ-து)
## வாடகை விளம்பரம்

1ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை எனும் முகவரியில் அமைந்துள்ள பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கத்தின் தலைமை அலுவலகத்தின் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள 03 கடைக் கட்டடங்கள் மற்றும் களஞ்சியக்கட்டடம் என்பன வாடகைக்கு வழங்கப்படவுள்ளது.

1. கடைக்கட்டடங்கள் - எண்ணிக்கை 03
   அளவு - ஒவ்வொன்றும் நீளம் 25 அடி x அகலம் 14 அடி
2. களஞ்சியக்கட்டடம் - எண்ணிக்கை 01
   அளவு - நீளம் 60 அடி x அகலம் 40 அடி

- **விண்ணப்பிக்கும் முறை :**
  **மூடிய கேள்விக் கோரல்**
- **விண்ணப்ப முடிவுத்திகதி : 15.03.2025**

முற்பணம் மற்றும் வாடகை தொடர்பான மேலதிக விபரங்களுக்கு:
**021 226 3699/ 077 441 7870** என்ற இலக்கத்திற்கு அழைக்கவும்.


**விண்ணப்ப முகவரி:**
**தலைவர்,**
**பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்,**
**1 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.**

(cr 44379) (N-1)

**தலைவர்.**

# மரண அறிவித்தல்

## கனகரட்ணம் சின்னம்மா



**தோற்றம்** 14.04.1934

**மறைவு** 22.02.2025

சுன்னாகம் மேற்கு, பருத்திக்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் சின்னம்மா நேற்றுமுன்தினம் (22.02.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கமுத்து தம்பதியரின் இளை மகளும், திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - சீதேவன் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கனகரட்ணத்தின் மனைவியும், மனோகரன், ரவீந்திரன், நளினி, புவீந்திரன், சாந்தினி, முகுந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவராசா, கலைச்செல்வி, ரசி, ராதிகா, ராஜன், அமரசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை, செல்வத்துரை, அன்னப்பிள்ளை, சரஸ்வதி மற்றும் சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சம்யுக்தா, சரண்யா, மதுராங்கன், பிரதீஸ், பிரசாந், பிரவீண், ரஜனுயா, கார்த்திகா, கிரிசாந், தர்மிகா, தர்ஷிகா, தருணிகா, ரூபிதா, அகிலன், சிந்தூரி, காலஞ்சென்ற ரிஷிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாரா, மிளிர்ணன், வெண்பா, வெண்ணிலா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS57590) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைக்களமாகும் நாடு; பாதுகாப்பை உறுதிசெய்க

## சஜித் வலியுறுத்து

நாடுமுழுவதும்கொலைச்சம்பவங்க ளால் நாட்டு மக்களினதும் மக்கள் பிரதிநிதிகளினதும் உயிருக்குப் பாதுகாப்பற்றநிலைஏற்பட்டுள்ளது. ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்யும் முறையான வேலைத்திட்டத்தை முன்வையுங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாஸநாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். நாட்டில்தலைதூக்கியுள்ள கொலைச்சம்பவங்களால் சமூகத்தில்அனைவரும்கடும்நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். நீதிபதிகளினதும் சட்டத்தரணிகளினதும் பாதுகாப்புக்கூடபாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் என்று குறிப்பிட்டார். (ச-இ)

# தமிழக மீனவர் கைதை கண்டித்து ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்!

சென்னை, பெப்.24




இலங்கைக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 32 பேரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு தமிழக முதலமைச்சர்மு.க.ஸ்டாலின்கடிதம்எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் அண்மைக் காலங்களில் கவலையளிக்கக்கூடிய வகையில் அதிகரித்துள்ளது. இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 32 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் 5 மீன்பிடி விசைப் படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்க இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்று பலமுறை கேட்டுக் கொண்டபோதும், இலங்கைக் கடற்படையினரின் கைது நடவடிக்கைகள் தொடர்கின்றன.

மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்கவும் வலுவான இராஜதந்திர முயற்சிகளை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (ஏ-இ)



# தொழிலதிபர் சாமியின் புகழுடல் தீயுடன் சங்கமம்

தினக்குரல் பத்திரிகையின் ஸ்தாபகரும், பிரபல தொழிலதிபருமான எஸ்.பி.சாமியின் புகழுடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை தீயுடன் சங்கமமானது.

கடந்த புதன்கிழமை தனது 89 ஆவது வயதில் காலமான சாமியின் புகழுடல் கடந்த வெள்ளிக்கிழமை முதல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை இறுதிக் கிரியைகள் ஆரம்பமாகி இடம்பெற்று அஞ்சலிக் கூட்டத்தைத் தொடர்ந்து புகழுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டுச் சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (ஏ-66-20)

## இலங்கை...

இந்தப் பயணத்தில் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு முன்னதாக இந்தியப் பிரதமரின் வருகை ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிகின்றது. இந்தப் பயணத்தின் போது ஏற்கனவே இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ள கூட்டுத்திட்டங்களைச் செயல்வடிவில் கொண்டுவருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சம்பூர் மின்நிலையத் திட்டம், திருகோணமலை எரிபொருள் மற்றும் பொருளாதார வலயம், வலுசக்தி குழாய் திட்டம், மற்றும் வடக்குத் தீவுகளின் சூரியசக்தித் திட்டம் உட்பட ஏற்கனவே இணக்கப்பாடுகள் எட்டப்பட்ட கூட்டுத் திட்டங்கள் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வரவின்போது செயல் வடிவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-ஏ-இ)

## மயங்கி...

ஏறாவூரைச்சேர்ந்த ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

ஏறாவூரைச் சேர்ந்த முகம்மது ஹனிபா முகமது சமீர் (வயது-38) என்பவரே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. மயங்கி வீழ்ந்தவரை மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இறப்பு விசாரணைகளை வலி. கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ஏ-26)

## 32 மீனவர்களின்...

தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகம் அருகே நேற்று நடைபெற்ற அவசர மீனவ ஆலோசனைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கக்கோரியும் இந்த வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஏ-இ)

## எம்.பி.க்களுக்கான...

வில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக அரசாங்கம் கடைப்பிடித்துவரும் கொள்கையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அனைவருக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியிருந்த நிலையிலேயே, அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று இதுதொடர்பாகக் கோரிக்கை முன்வைத்துள்ள போதும், இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. கோரிக்கை முன்வைத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பாக அறிக்கை ஒன்றை வழங்க பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்த அறிக்கைகளைப் பரிசீலித்து தேவைப்பட்டால் மட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆளும் கட்சி உறுப்பினர்கள் எவரும் இவ்வாறான கோரிக்கையை முன்வைக்கவில்லை - என்றார். (அ-ஏ-இ)

## சம்பூர்...

திருகோணமலை, சம்பூரில் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கான கூட்டு முயற்சி ஒப்பந்தத்தில் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கையும், இந்தியாவும் கைச்சாத்திட்டிருந்தன. இலங்கை மின்சாரசபைக்கும், இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனத்துக்கும் இடையே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஆயினும் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது தாமதமாகியிருந்தது.

இந்தத் திட்டத்துக்கு கடந்த காலங்களில் ஜே.வி.பி.யும்எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிலையில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் கடந்தவாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், சம்பூர் மின் உற்பத்தி நிலையத்துக்கான அனுமதி வழங்கப்பட்டது.

சர்ச்சைகளைத் தோற்றுவித்த சம்பூர் அனல் மின் நிலையத்துக்கு மாற்றீடாகவே இந்த சூரிய மின் உற்பத்தித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த திட்டத்தின் முதற்கட்டம் மூலம் 50 மெகாவோட் சூரிய மின்சாரம் உற்பத்தி செய்யவும், இரண்டாவது கட்டத்தில் 70 மெகாவோட் சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ஏ-இ)

## வெப்பநிலை...

யுள்ளது. வடக்கு, மேல், வடமேல், வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்துக்கு உயரக்கூடும் என்றும், சிறுவர்கள், முதியோர்கள் மற்றும் நோயாளர்கள் இதுதொடர்பில் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா. அமர்வில்...

ஹேரத் தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று ஜெனிவா செல்கின்றது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான உயர்மட்டக் குழு, எதிர்வரும் 28ஆம் திகதி வரை ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளில் பங்கேற்கவுள்ளது.

இலங்கைக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டுகள் அடங்கிய விசேட அறிக்கை ஒன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இறுதிக்கட்டப்போரில் நடந்தன என்று கூறப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வகையில் இலங்கையால் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும், அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு தெளிவுபடுத்தும் வகையில் இந்த அறிக்கை அமையும் என்றும் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

(அ-எ-இ)

## தாக்கப்பட்டவர்...

வடமராட்சி கிழக்கு, வத்திராயனில் தாக்குதலுக்கு இலக்காகிச் சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை நடந்திருந்தது. தாக்குதல் சம்பவத்தில் நால்வர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். குடும்பத் தகராறின் காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும், வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவர் வவுனியால் இருந்து ஆள்களை அழைத்துவந்து, தந்தை, சகோதரன், சகோதரனின் மகன், சகோதரனின் மனைவி ஆகியோர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

தாக்குதலுக்கு இலக்கான நால்வரும் மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தநிலையில், இருவர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். அவர்களில் ஒருவர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்றுவந்த நபர் நேற்று உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-எ-26)

## மூதாட்டி...

கோப்பாய், கட்டப்பிராயில் மூதாட்டி ஒருவர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

பி.நாகேஸ்வரி (வயது-78) என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் தனது வயதான சகோதரனுடன் தனித்து வாழ்ந்து வந்தநிலையில், நேற்றுமுன்தினம் குளிக்கச் சென்றுள்ளார். அதன்பின்னர் வீடு திரும்பவில்லை. நேற்று அவர் கிணற்றடிக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இறப்பு விசாரணைகளை வலி. கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-எ-26)

## கூட்டு...

செயற்படுவது தொடர்பாக எடுத்துள்ள முடிவை இலங்கைத் தமிழரசுக் கட்சி மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடத்திய ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இந்த விடயங்களில் நாடாளுமன்றத்தில் கூட்டாக இணைந்து செயற்படும் நோக்கில் நாம் விடுத்த கலந்துரையாடலுக்கான அழைப்பை இலங்கைத் தமிழரசுக் கட்சி தட்டிக்கழித்திருப்பது மிகவும் கவலைக்குரியது. இதை மிகவும் ஆபத்தான, பொருத்தமற்ற முடிவாகவே நாம் கருதுகின்றோம்.

இவ்வாறான செயற்பாடு தமிழ் இனத்துக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் இலங்கைத் தமிழரசுக் கட்சி தங்களின் முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும். கலந்துரையாடலுக்கான பச்சைக் கொடியை தமிழரசுக் கட்சி காட்ட வேண்டும்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி புதிய அரசியலமைப்பு உருவாக்க விடயத்தில் தமிழ்மக்கள் பேரவையின் யோசனையைத் தான் முன்வைக்க விருக்கின்றோம். இந்த விடயம் தொடர்பில் நாங்கள் ஏற்கனவே ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியினருடன் கலந்துரையாடியுள்ள நிலையில் இதுவரை கொள்கை ரீதியாக அவர்கள் எந்தவொரு ஆட்சேபனைகளையும் தெரிவிக்கவில்லை.

அவர்களுக்கு ஏதேனும் யோசனை இருந்தால் அவற்றை முன்வைக்க முடியும். சிவில் சமூகத் தலைவர்களுடன் இந்த விடயம் தொடர்பாக நாங்கள் ஏற்கனவே கலந்துரையாடியுள்ள நிலையில் தமிழ்மக்கள் பேரவை தயாரித்த புதிய அரசியலமைப்பு யோசனையில் சில திருத்தங்களைக் கோரியுள்ளனர். அந்தத் திருத்தங்களையும் உள்வாங்கிச் செயற்படுவதற்கும் நாங்கள் தயாராகவுள்ளோம்.

தமிழரசுக் கட்சி இந்த விடயத்தில் எப்போதும் எம்முடன் இணைந்து கொள்ளலாம். அவர்கள் இந்த முயற்சிக்குத் தவறாமல் ஒத்துழைக்க வேண்டும்.

தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷையை, தமிழ்த்தேசிய நிலைப்பாட்டின் வெளிப்பாட்டை முன்கொண்டு செல்வதற்கு நாடாளுமன்றத்தில் தவிர்க்க முடியாத சக்திகள். இதை தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் உணர்ந்து கொள்வதுடன் கட்சி ரீதியாக இதுதொடர்பில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் - என்றார். (அ-எ-66)

## இணைபிரியாமல்...

ஒன்று மட்டுவில், சாந்திபுரத்தில் நடந்துள்ளது.

சாந்திபுரம், நெசவுநிலைய வீதியைச் சேர்ந்த நா.சிவபாதம் (வயது-82), அவரது மனைவி சி.கமலாதேவி (வயது73) ஆகியோரே ஒரே நாளில் உயிர் பிரிந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு நடந்துள்ளது.

இவர்கள் இருவரும் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் வாழ்ந்து வந்துள்ளனர். அவர்களின் மூத்த மகன் அன்றையதினம் வழமை போன்று அவர்களுக்கு உணவு கொடுத்துவிட்டு, அருகில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். மீண்டும் அவர் வந்தபோது தந்தையும், தாயும் படுத்தநிலையில் அசைவற்றிருந்தனர் .பின்னரே அவர்கள் இருவரும் உயிரிழந்துவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இணைபிரியாது அன்பாக வாழ்ந்த இந்தத் தம்பதி ஒரே நாளில் உயிர்பிரிந்த சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சி. இளங்கீரன் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். இவர்கள் மாரடைப்பின் காரணமாகவே உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதன் பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு, இருவரது உடல்களும் ஒன்றாகத் தகனம் செய்யப்பட்டன. (அ-எ-26-131-28-159)

## யாழ்...

நண்பர் ஆகியோர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து நடந்த சந்தர்ப்பத்தில் அந்தச் சொகுசு வாகனத்தில் மாவட்டச் செயலரின் மகனும், அவரது நண்பரும் பயணித்த நிலையில் வாகனம் மாவட்டச் செயலரின் பதவிநிலைப் பெயர்கொண்ட பெயர்ப் பலகையுடனேயே பயணித்துள்ளது எனத் தெரிய வருகின்றது.

நேற்று மாலை மாவட்டச் செயலரின் சொகுசு வாகனத்தில் மாவட்டச் செயலரின் மகனும், அவரது நண்பர்கள் ஐவரும் சென்றபோதே இந்த விபத்து நடந்துள்ளது. யாழ்ப்பாணம், கந்தர்மடம் சந்திக்கு அருகில் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியோர மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. அருகில் உள்ள வீட்டுக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது.

மாவட்டச் செயலரின் மகன் சிறு காயங்களுக்கு உள்ளாகியிருந்த நிலையில், சாரதி இருக்கைக்கு அருகில் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த அவரது நண்பர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். அவரது கால்கள் வாகனத்துக்குள் சிக்குண்டநிலையில், சுமார் ஒருமணி நேரப் போராட்டத்தின் பின்னர் அவர் வெளியே எடுக்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-26-20-125)

## உள்ளூராட்சித்...

இடையில் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் ஏற்கனவே உள்ள, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய கட்சிகளுடன் தற்போது தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், சமத்துவக் கட்சி, ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு என்ற 4 தரப்புகள் புதிதாக இணைந்துள்ளன. இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டனர். எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை இணைந்து தேர்தலை எதிர்கொள்ளவுள்ளன.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகளுக்கும் சக தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் ஏற்கனவே உள்ள, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய கட்சிகளுடன் தற்போது தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், சமத்துவக் கட்சி, ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு என்ற 4 தரப்புகள் புதிதாக இணைந்துள்ளன. இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டனர். எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை இணைந்து எதிர்கொள்வது என்று அவை தீர்மானித்துள்ளன.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்னும்கட்சியின்பெயரில்இணைந்து போட்டியிடுவதுடன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சங்குச் சின்னத்தை பொதுவான சின்னமாக அனைவரும் ஏற்றுக்கொண்டு அந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்றும், மாவட்ட ரீதியாக யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் மாவட்டத் தேர்வுக்குழுவை உருவாக்குவது என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகள் துணையாலேயே பாதாளக்குழுக்கள் தாண்டவம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், பெப். 24**

**கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களாக அரசியல்வாதிகளின் ஆசீர்வாதத்துடனே பாதாள உலகக் கும்பல்கள் வீரியம் பெற்றன தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இப்போது பதவிக்கு வந்ததால் அவர்களது பாது காப்பு கேள்விக்குறியாகியுள்ளது எனப் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். எமது ஆட்சியில் குற்றமிழைத்த வர்கள் தப்பமுடியாது. தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் எவருக்கும் பாதாள உலகக் கும்பல்களுடன் தொடர்பு இல்லை. கடந்த காலங்களில் குற்றச் செயல்க ளில் ஈடுபட்டவர்களும் விரை வில் கைதுசெய்யப் படுவார்கள். அண் மைக்காலக் குற்றச் செயல்க ளுடன் தொடர்புபட்டவர் கள் ஒரு சில மணித்தியாலங்க ளுக்குள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். பாதாள உலகக் கும்பல்களை பூண்டோடு ஒழிப் பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. பாதுகாப்புக் காரணி களை கருத்திற்கொண்டு எல்லா விட யங்களையும் வெளிப்படையாகக் கதைக்கமுடியாது எனவும் அவர் தெரி வித்துள்ளார். (ச-6)

**மேசன் கூலியாட்கள் தேவை**

வடமாகாணத்தில் இயங்கி வரும் கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு அனுபவம் உள்ள மேசன் கூலியாட்கள் தேவை.

தொடர்பு: **076 783 3020**

ஓம் விராட் விஸ்வ பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 06 . 1950



மறைவு 21 . 02 . 2025

### சிந்தாதேவி கந்தசாமி

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிந்தாதேவி கந்தசாமி அவர்கள் கடந்த 21.02.2025 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னராசா-வாலாம்பிகை தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற ஈழத்து முதன்மை ஸ்தபதி ஆறுமுகம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கலாபூசணம் ஆறுமுகம் கந்தசாமி ஸ்தபதி அவர்களின் அன்பு மனைவியும் கோகிலவாணி (வட்டுக்கோட்டை), றமேஸ் (கனடா), சதீஸ் (பிரான்ஸ்), ஓவியமாமணி ராயூ (ராயூ ஆட்ஸ்-பிரான்ஸ்), காலஞ்சென்ற தினேஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீகாந்தன், சுகிதா, பரீனா, சங்கீதா ஆகியோரின் அன்பு மாமியாரும் சற்குணதேவி, சறோஜினிதேவி, செல்வேந்திராதேவி, காலஞ்சென்ற சர்வேந்திரராஜா, ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கலாகேசரி தம்பித்துரை ஸ்தபதி, நாகரத்தினம் (மணி-லண்டன்), காலஞ்சென்றவர்களான கலாபூசணம் ஜீவரட்ணம் ஸ்தபதி, இராசதுரை (முருகையா), துரைராசா ஸ்தபதி, மகாலிங்கம் (மகான்), மற்றும் கலாபூசணம் சிவலிங்கம் ஸ்தபதி, காலஞ்சென்ற ஆனந்தராசா மற்றும் செல்வரத்தினம், சேதுராமன், சாந்தினி (வவா-கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் தேனுஜன், ப்ரீத்திகா, யாழவன், விகேஸ், கவிநயன், மதுநயன், எழிலிசை, விசாகன், மகிழவன், முகிலவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2025) செவ்வாய்க்கிழமை காலை 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**25/9 அரசடி லேன்,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**ஆறுமுகம் கந்தசாமி ஸ்தபதி**
**குடும்பத்தினர்.**
**076 866 0302**

## மரண அறிவித்தல்

மலர்வு 1935 02 13



உதிர்வு 2025 02 22

அமரர்

### சின்னராசா அன்னலட்சுமி

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் முருகன் வீதி திருநெல்வேலியினை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா அன்னலட்சுமி அவர்கள் 22.02.2025 அன்று காலமாகிவிட்டார் அன்னார் காலஞ்சென்ற காத்தி-கதிரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகன் ஆச்சிப்பிள்ளையின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற நாகன் சின்னராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகலிங்கம் தங்கராசா, சின்னராசா அவர்களின் பாசமிகு சகோதரியும் சிறி, செல்வம், ரவி, இன்பம், சொக்கன் (மன்மதன்) கிறிஸ்தா, வனஜா, புனிதா, சிவனேசன், சின்னக்கிளி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார். கமலா, ஜெகதீஸ்வரி, யமுனா, சஞ்சிகா, ராஜலக்ஸ்மி (ராஜி), செல்வம், ஜெயந்திரன், சந்திரபாலன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 24.02.2025 அன்று 12.00 மணியளவில் இறுதிக்கிரியைக்காக பாற்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் - குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 10 . 1936



மறைவு 23 . 02 . 2025

### பஞ்சாட்சரம் தவமணி

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் தவமணி அவர்கள் நேற்று (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பஞ்சாட்சரம் அவர்களின் அன்பு மனைவியும் அன்னலட்சுமி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயந்தி மாலா, பராசக்தி, சாந்திமலர், சுமுதினி, பவானி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான நடேசபிள்ளை, பூவேந்திரராஜா, வாமதேவா, இராமநாதன், குணசீலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2025) திங்கட்கிழமை பிற்பகல் 01.30 மணியளவில் புகையிரத நிலைய வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் எனும் முகவரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பிராமண உயரப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 856 0753**
**076 365 1856**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org